**செய்தி வெளியீடு எண்: 118** **நாள்:23.02.2013**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு 1 கோடியே 81 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 34 புதிய வாகனங்களையும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களுக்கு 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 11 ஜீப்புகளையும் வழங்கினார்கள்.

அரசின் திட்டங்களை வகுப்பதற்கும், மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் செயலாக்கத்தை கணிப்பீடு செய்வதற்கும், தேவையான புள்ளி விவரங்களை அறிவியல் பூர்வமாக வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் சேகரித்து அரசு துறைகளுக்கும், மாநில திட்டக்குழுவிற்கும் உரிய நேரத்தில் வழங்கி, அரசின் திட்டங்களை சீரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணையாக தமிழ்நாடு அரசின் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை செயல்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் திட்டப் பணிகளின் தரத்தை உயர்த்தவும், ஆய்வுப் பணிகளை மேம்படுத்தவும், ஊர்தி வசதி தேவைப்படுவதைக் கருத்திற்கொண்டு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு 1 கோடியே 81 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 32 பொலிரோ ஜீப்புகள் மற்றும் 2 அம்பாசிடர் கார்கள், என மொத்தம் 34 வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் நிருவாகப் பணிகளை மேம்படுத்தவும், வெளிப்படையான நிருவாகத்தை உறுதி செய்யவும், மாவட்ட அலுவலகங்களில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை சார்பில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாவட்ட அளவில் பணிபுரியும் பல்வேறு நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த முன்னோடி பயிற்சி மற்றும் மாவட்ட அலுவலர் சார்ந்த குறுகிய காலப் பயிற்சி ஆகியவை தமிழ்நாட்டில் இயங்கும் 11 மாவட்ட ஆய்வுக்குழுக்களின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக் குழுவினர் தங்கள் பணி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் அரசு அலுவலகங்களை மாதம் ஒரு அலுவலகம் வீதம் விரிவாக ஆய்வு செய்வதுடன், பல அரசு அலுவலகங்களில் திடீர் ஆய்வும் மேற்கொள்கிறார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட விழிப்புப் பணி அலுவலர்களுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

மாவட்ட அளவில் பணிகளை மேற்கொள்ளும் உயர்நிலை அலுவலர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 11 மாவட்ட ஆய்வுக் குழுவிற்கு தலா ஒரு ஜீப் வீதம் 85 லட்சம் ரூபாய் மிதிப்பீட்டில் வாங்கப்பட்ட 11 ஜீப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்ததுறைச் செயலாளர், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 23.2.2013